| **2. மின்னோட்டவியல்** (20 marks) | |
|---|---|
| 1 mark → 1 Question | 5 mark → 2 Question 52,53 |
| 3 mark → 3 Question 33, 34,35 | No 10 mark Question |

## 1. மின்னோட்டவியல் – 1 மதிப்பெண் வினாக்கள்

1. மின்னோட்டத்திற்கும் இழுப்பு திசைவேகத்திற்கும் உள்ள தொடர்பு
   அ) $I = nAV_d/e$ **ஆ) $I = nAV_d e$**
   இ) $I = neV_d/A$ ஈ) $I = nAV_dE$ [அ -10]

2. வெப்ப நிலை குறையும்போது, மின்காப்பு பொருளின் தன்மின்தடை எண்
   ***அ) அதிகரிக்கும்*** ஆ) குறையும்
   இ) மாறுபடாது ஈ) சுழியாகும் (DMP, மா-08,09,ஜு-13)

3. மின்கடத்து எண்ணின் அலகு [J-07]
   அ) m ஆ) ohm
   இ) ohm-m ***ஈ) mho-m$^{-1}$***

4. பாதரசத்தின் பெயர்வு வெப்ப நிலை [ஜு-09]
   அ) 4.2 $^0$C ***ஆ) 4.2 K***
   இ) 2.4$^0$C ஈ) 2.4 K

## 1. மின்னோட்டவியல் –1 மதிப்பெண் கணக்கீட்டு வினாக்கள்

1. குறிப்பிட்ட நீளம் கொண்ட தாமிரக் கம்பியொன்றின் மின்தடை R. அதன் நீளம் இரு மடங்காக்கப்படும் போது, மின் தடை எண்
   அ) இரு மடங்காகும் ஆ) பாதியாகும் இ) நான்கு மடங்காகும்
   ***ஈ) மாறுபடாது*** (அ-06, ஜு-08,மா-10,11)

2. ஒரு கம்பியின் விட்டம் இரு மடங்காகும் போது அதன் மின்தடை [M-12]
   அ) இரு மடங்கு குறைகிறது ***ஆ) நான்கு மடங்கு குறைகிறது***
   இ) பதினாறு மடங்கு குறைகிறது ஈ) நான்கு மடங்கு அதிகரிக்கிறது

3. ஒரு மெல்லிய தாமிக்கம்பி மற்றும் தாமிரத்தண்டு ஆகியவற்றின் தன்மின்தடை எண் முறையே $\rho_1$ Ω m மற்றும் $\rho_2$ Ω m எனில்,
   அ) $\rho_1 > \rho_2$ ஆ) $\rho_2 > \rho_1$ ***இ) $\rho_1 = \rho_2$*** ஈ) $\frac{\rho_2}{\rho_1}$

4. 10 cm நீளமுடைய உலோக கம்பியின் மின்தடை 2Ω. இது 50 cm நீளமுடைய கம்பியாக சீராக நீட்டிக்கப் படுகிறது எனில், மின் தடையின் மதிப்பு [M-06]
   அ) 25 Ω ஆ) 10 Ω இ) 5 Ω ***ஈ) 50 Ω***

5. இரு 2 Ω மின்தடைகள் பக்க இணைப்பில் இருந்தால், தொகுபயன் மின்தடையின் மதிப்பு (செ-08,ஜு-11)
   அ) 2 Ω ஆ) 4 Ω ***இ) 1 Ω*** ஈ) 0.5 Ω

6. ஒரு கார்பன் தடையாக்கியின் மீது குறிக்கப்பட்டுள்ள நிறக்குறியீடானது சிவப்பு, சிவப்பு, கருமை. அந்த கார்பன்தடையாக்கியின் மின்தடை (ஜு-06)
   அ) 2.2 Ω ***ஆ) 22 Ω*** இ) 220 Ω ஈ) 2.2 Ω

7. கார்பன் தடையாக்கியின் ஒரு முனையிலுள்ள பழுப்பு நிற வளையம் குறிக்கும் மாறுபாட்டு அளவானது
   ***அ) 1%*** ஆ) 2% இ) 5% ஈ) 10% **[M-07]**

8. 110 W, 220 V மின்பல்பு (electric bulb) ஒன்றின் மின்னிழையின் மின்தடை
   ***அ) 440 Ω*** ஆ) 220 Ω இ) 484 Ω ஈ) 848 Ω [M-09]

9. 240 மின்னழுத்ததில் செயல்படும் மின்சூடேற்றியின் மின்தடை 120 Ω எனில் மின்திறன்
   அ) 400 W ஆ) 2W ***இ) 480 W*** ஈ) 848 Ω [J-10]

10. 2.2 V மின்னியக்கு விசை கொண்ட ஒரு மின்கலம் 10 Ω மின்தடையாக்கி வழியாக 0.2 A மின்னோட்டத்தை செலுத்துகிறது. மின்கலத்தின் அகமின்தடை
    அ) 0.1 Ω ***ஆ) 1 Ω*** இ) 2 Ω ஈ) 1.33 Ω [J-12]

11. சம மதிப்பு மின்தடை(R) உடைய n மின்தடைகள் தொடரிணைப்பில் உள்ளபோது, தொகுபயன் மின்தடை
    அ) n/R ஆ) R/n இ) 1/nR ***ஈ) nR*** [S-12]

## 2. மின்னோட்டவியல் – 3 மதிப்பெண் வினாக்கள்

1. வரையறு இழுப்புத் திசைவேகம் [M-07,10,11S-08,09,J-09,13,,O-10,11]
2. இயக்க எண் - வரையறு , அதன் அலகினைக் குறிப்பிடுக. [M-08,09,O-06]
3. ஒரு பொருளின் தன்மின் தடை எண் வரையறு. (செ-12)
4. ஒருகடத்தி மீக்கடத்தியாக மாறும் வெப்ப நிலையில் மாறுபாடுகளை எழுதுக. [J-10]
5. மீக்கடத்துதிறன் என்றால் என்ன? [DPM]
6. ஓமின் விதியினைக் கூறு. [M-06,S-07,09,M-10,13,J-12,S-12]
7. மீக்கடத்தியின் மூன்று பயன்களைக் கூறு. [J,O-06,J-07,13,S-07]
8. மாறுநிலை வெப்ப நிலை வரையறு. (மா-12)
9. வரையறு - மின்தடை வெப்ப நிலை எண். [J-08,M-11]
10. கிர்ச்சாப்பின் 1) மின்னோட்ட மற்றும் 2) மின்னழுத்த விதிகளைக் கூறுக. [J-06,M-08]
11. கிர்ச்சாப்பின் மின்னழுத்த விதிகளைக் கூறுக. [M- 07,09]
12. மின்னியக்கு விசைக்கும், மின்னழுத்த வேறுபாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஜு-07, செ-08,மா-13)
13. மின்திறனுக்கும் மின்னாற்றலுக்கும் இடையேயான வேறுபாட்டை கூறுக. (ஜு-08,09)
14. பாரடேயின் மின்னாற்பகுப்பு விதிகளைக் கூறுக. [M-06]
15. பாரடேயின் மின்னாற்பகுப்பு பற்றிய முதல் விதிகளைக் கூறுக. [J-13]
16. துணைமின்களின் பயன்பாடுகளைக் கூறுக. (செ-08)
17. துணைமின்களின் நற்பண்புகள் யாவை? [DPM]

## 2. மின்னோட்டவியல் – 3 மதிப்பெண் கணக்கீடுகள்

1. கடத்தி ஒன்றின் குறுக்கு வெட்டு வழியே ஒரு வினாடியில் $6.25 \times 10^{18}$ எலக்ட்ரான்களகடந்து சென்றால் மின்னோட்டத்தை கணக்கிடுக. (எலக்ட்ரானின் மின்னூட்டம் $1.6 \times 10^{-19}$ C) [M-10,J-11]
2. 2 m நீளமும், 0.4 mm விட்டமும் உடைய மாங்கனின் கம்பியின் மின் தடை 70 Ω பொருளின் தன் மின்தடை எண்ணைக் கணக்கிடுக. (மா-13)
3. $0^0$C வெப்ப நிலையில் நிக்ரோம் கம்பியின் மின்தடை 10 Ω. அதன் மின்தடை வெப்பநிலை எண் 0.004/$^0$C. நீரின் கொதிநிலையில் அதன் மின்தடையைக் கணக்கிடுக. [DPM,J-07,S-07,M-08,O-10]
4. $0^0$C பிளாட்டினம் கம்பியின் மின்தடை 4 Ω.அதன் மின்தடை வெப்பநிலை எண் 0.0038/$^0$C எனில்,$100^0$ C -ல் கம்பியின் மின்தடையைக் கணக்கிடுக. [M-07,J-09,J-10]
5. சம நீளம் கொண்ட ஒரே உலோகத்தாலான இரு கடத்திகளின் மின்தடைகள் முறையே 5 Ω மற்றும் 10 Ω அக்கடத்திகளின் ஆரங்களின் விகிதத்தைக் காண்க. [M-09]
6. 400 W மின் திறன் கொண்ட ஒரு மின்சலவை பெட்டி தினமும் 30 நிமிடங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு யூனிட் (unit) திறனுக்கான கட்டணம் 75 பைசா எனில், சலவைப்பெட்டியை ஒருவார காலம் பயன் படுத்தினால் ஏற்படும் செலவைக் கணக்கிடுக. (ஜு-08,12)
7. கொடுக்கப்பட்ட மின்சுற்றில் மொத்த மின்தடை மற்றும் மின்கலன் தரும் மின்னோட்டத்தைக் காண்க. [M-06,J-10]




8. கீழ்க்கண்ட மின்சுற்றில் மின்னோட்டத்தையும், அதன் திசையையும் காண்க. [S-09]


***ஆ.முருகையா, முதுகலை ஆசிரியர்- அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குரோம்பேட்டை- சென்னை-44.***
மின்னஞ்சல்: *tnhspgtakpm@gmail.com*




9. படத்தில் காட்டியுள்ள படி மூன்று மின்தடையாக்கிகள் 10 V மின்னழுத்த வேறுபாட்டுடன் தொடராக இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மின் தடையாக்கிக்கும் இடைப்பட்ட மின்னழுத்த வேறுபாட்டினைக் கணக்கிடுக. [O-06,J-10,]




10. கொடுக்கப்பட்ட மின்சுற்றில் மொத்த மின்தடை மற்றும் மின்கலன் தரும் மின்னோட்டத்தை கணக்கிடுக. [O-09]




11. பின்வரும் சுற்று வலையில் A மற்றும் B க்கு இடைப்பட்ட தொகுபயன் மின்தடையைக்கணக்கிடுக. [J-12]




$R_1 = R_2 = 15\ \Omega$.

## 2. மின்னோட்டவியல் – 5 மதிப்பெண் வினாக்கள்

1. இயக்க எண் என்றால் என்ன? மின்னோட்டத்திற்கும், இழுப்பு திசைவேகத்திற்கும் உள்ள தொடர்பினை வருவி. [M-06]
2. மீக்கடத்தியின் 5 பயன்களைக் கூறு. [S-08,M-09,13,J-11,S-12]
3. வெப்பநிலையைப் பொறுத்து மின்தடை மாறும் விதத்தை சமன்பாடு மற்றும் வரைபடம் மூலம் விளக்குக. (ஜு-12)
4. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்தடையாக்கிகள் பக்க இணைப்பில் உள்ளபோது, அவற்றின் தொகுபயன் மின்தடைக்கான கோவையைப் பெறுக. (அ-06)
5. வோல்ட் மீட்டரைப் பயன்படுத்தி,மின்கலத்தின் அகமின்தடை யை காணும் முறையை விவரி. [J-08,S-09,J-11,13,M-13]
6. ஒரு வலைச்சுற்றில் கிர்ச்சாப்பின் இரண்டாம் விதியை எழுதி விளக்கம் தருக. (ஜு -07 )
7. வீட்ஸ்டோன் சமனச்சுற்றில் சுழிவிலக்கத்திற்கான நிபந்தனையைப் பெறுக. [DPM, O-06,M-06,08,10,J-06,09]
8. மின்னழுத்தமானியின் தத்துவத்தை விளக்குக. (செ-07)
9. மின்னழுத்தமானியைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட இரு மின்கலன்களின் மின்னியக்கு விசையை ஒப்பிடும் முறையை விவரி. [DPM,M-07,12,O-10,11]
10. பாரடேயின் மின்னாற்பகுத்தல் விதியினைக் கூறுக. முதல் விதியை மெய்ப்பிக்கும் ஆய்வினை விவரி. (செ-07)
11. பாரடேயின் மின்னாற்பகுத்தல் விதியினைக் கூறுக. இரண்டாம் விதியை மெய்ப்பிக்கும் ஆய்வினை விவரி. [J-06, M-08,11]
12. டேனியல் மின்கலத்தின் செயற்பாட்டினை படத்துடன் விவரி. (ஜு-09)
13. லெலாஞ்சி மின்கலத்தின் செயற்பாட்டினை படத்துடன் விவரி. [J-07,J-09,S-12]
14. காரிய அமில சேமக்கலம் செயல்படும் விதத்தை விளக்குக. (செ-07)

## 2. மின்னோட்டவியல் – 5 மதிப்பெண் கணக்கீடுகள்

1. $10 \times 10^{-6}\ m^2$ குறுக்கு வெட்டு பரப்பு கொண்ட தாமிரக்கம்பியில் 2A மின் னோட் டம் நிகழும்போது எலக்ட்ரான்களின் இழுப்புத் திசைவேகம் என்ன? கடத்தியில் $8 \times 10^{28}$ எலக்ட்ரான்கள்/$m^3$ இருப்பதாக கருதுக. (ஜு - 10)
2. கடத்தியின் ஓரலகு $10^{-6}\ m^2$ குறுக்கு வெட்டு பரப்பு கொண்ட தாமிரக்கம்பியில் 2A மின்னோட்டம் பாய்கிறது. கடத்தியின் ஓரலகு பருமனில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை $8 \times 10^{28}$ எனில் மின்னோட்ட அடர்த்தி மற்றும் சராசரி இழுப்புத் திசைவேகம் ஆகியவற்றை கணக்கிடுக. (மா-09)
3. கம்பிச்சுருள் ஒன்றின் மின்தடை $20^0C$-ல் 50 Ω எனவும், $70^0C$-ல் 65 Ω எனவும் அளவிடப்படுகிறது. மின்தடை வெப்பநிலை எண்ணைக்கணக்கிடுக. (ஜு-13)
4. 400 W மின் திறன் கொண்ட ஒரு மின்சலவை பெட்டி தினமும் 30 நிமிடங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு யூனிட் (unit) திறனுக்கான கட்டணம் 75 பைசா எனில், சலவைப்பெட்டியை ஒருவார காலம் பயன்படுத்தினால் ஏற்படும் செலவைக் கணக்கிடுக. ( ஜு-12/5மதி)
5. பக்க இணைப்பில் உள்ள 3 Ω , 5 Ω மற்றும் 2 Ω மின்தடை யாக்கிகள் 15 V வோல்ட் மின்னழுத்த வேறுபாட்டுடன் இணை க்கபட்டுள்ளன. ஒவ்வொ ன்றின் வழியே செல்லும் மின்னோட் டத்தை கணக்கிடுக. மேலும் தொகு பயன் மின்தடையையும், மொத்த மின்னோட்டத்தையும் கணக்கிடுக. [O-10]
6. மீட்டர் சமனச்சுற்றில் இடது பக்க இடைவெளியில் 10 Ω மின்தடை உள்ள போது சமனீட்டு நீளம் 51.8 செ.மீ. ஆக உள்ளது. 108 செ. மீ நீளமும் 0.2 மி.மீ ஆரமும் உடைய கம்பியின் மின்தடையையும் தன் மின்தடை எண்ணையும் கணக்கிடுக. (அ-10,ஜு-12)
7. இரு மின்தடையாக்கிகள் தொடரிணைப்பிலும், பக்க இணைப்பிலும் உள்ளபோது தொகுபயன் மின்தடைகள் முறையே 10 Ω மற்றும் 2.4 Ω எனில், தனித்தனியான மின்தடைகள் என்ன? (மா-07,10)
8. பின்வரும் சுற்று வலையில் A மற்றும் B புள்ளிகளுக்கு இடைப்பட்ட தொகுபயன் மின்தடையைக் கணக்கிடுக. (மா-07) அல்லது




9. படத்தில் காட்டியுள்ளவாறு 3 மின்தடையாக்கிகள் 10 V மின்னழுத்த வேறு பாட்டுடன் தொடராக இணைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு மின்தடையாக்கி க்கும் இடைப் பட்ட மின்னழுத்த வேறுபாடுகளைக்கணக்கிடுக. [O-06,J-10,12]




30th July 2013


**ஆ.முருகையா, முதுகலை ஆசிரியர்- அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குரோம்பேட்டை- சென்னை-44.**
மின்னஞ்சல்: *tnhspgtakpm@gmail.com*